என்று சொன்னாலும் சரி ஒப்பன் கிணறுகள் என்றாலும் சரி, குறிப்பிட்ட தொகையைக் கட்டி கேட்கிற நேரத்திலே அதற்கான மின் இணைப்பு உரிய முறையில் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே ஆரம்பித்த ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்ட பகுதியாகிய புதுக்கோட்டை வரைக்கும் இப்பொழுது விஸ்திரணம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போன்ற மிகவும் வறண்ட பகுதியாகிய, தண்ணீரே இல்லாமல், 300 அடி 400 அடி போர் போட்டால் கூட தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற பகுதியான நிலக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம், ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகளிலே எந்தப் பகுதியாக இருந்தாலும் அதிலே இந்த அரசு மின் இணைப்பு தருவதிலே தயக்கம் காட்டுவது இல்லை. எந்தப் பகுதி என்று பிரிவினை கிடையாது. எந்தப் பகுதியிலே இருந்தாலும் மின் இணைப்பு தருவதற்கு முன்னுரிமைப்படி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கிணறுகள் அமைப்பது சம்பந்தமான கேள்வி என்று சொல்லுகிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும். இது கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான கேள்வியே தவிர கிணறுகள் அமைப்பது சம்பந்தமான கேள்வி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 187, திரு. து. மூர்த்தி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

187—

சீர்காழி தொகுதியிலுள்ள ஏரிகளை ஆழப்படுத்துதல்

*3567—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரிகளான திருவாலி, பெருந்தோட்டம் ஏரிகளை நடப்பு நிதியாண்டில் ஆழப்படுத்தும் பணி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1992 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாலி ஏரியை மண்வாரி இயந்திரம் மூலம் தூர் வாரி எடுப்பதற்காக ஏறக்குறைய 1 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு கடந்த கோடையில் கரையினுடைய ஒரு பகுதி சீர் செய்யப்பட்டது. வருகின்ற கோடையிலே மீதம் உள்ள வேலைகள் எடுத்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருந்தோட்டம் ஏரியினுடைய ஒரு பகுதி சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டு புல்டோசர் கொண்டு ஒரு பகுதி வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள பணிகள் வரும் கோடை ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நாகை—காயிதே மில்லத் மாவட்டம் எனது சீர்காழி தொகுதியில், திருவாலி, பெருந்தோட்டம் என்ற இரண்டு ஏரிகளின் கீழ் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுடைய விளை நிலங்கள் இருக்கின்றன. அந்த ஏரிகள் இரண்டையும் தூர் வாரி ஒரு பகுதியிலே வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. முழுவதுமாக அதனை செயல்படுத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை விவசாயிகளுடைய விளை நிலங்களில் சிறப்பான முறையிலே விவசாயம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு விவசாயிகளுடைய நலனைக் கருதி செயல்படுகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு, இதனை முழுவதுமாகச் செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல பகுதி பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள பணிகளை வரும் கோடையாண்டிலே சிறப்பான முறையிலே முடித்து பாசன மேம்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 188. திரு. கே.பி. ராஜு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.